இந்திய உயர் ஸ்தானிகராலயம்
கொழும்பு

ஊடக அறிக்கை

இலங்கையின் கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளுக்கான ஆளுமை விருத்தி செயல்திட்டம்

இலங்கை அரசாங்கத்தின் கல்வி, உயர் கல்வி, மற்றும் தொழில் கல்வி அமைச்சின் கீழான கல்வி நிர்வாக சேவையின் 20 அதிகாரிகளைக் கொண்ட பேராளர்கள் குழு ஒன்று 2026 ஒக்டோபர் 05-16 வரை இந்தியாவின் புது டில்லியில் உள்ள கல்வி திட்டமிடல் மற்றும் நிர்வாக சேவைக்கான தேசிய நிலையத்தில் நடைபெற்ற விசேட ஆளுமை விருத்தி அமர்வுகள் மற்றும் பயிற்சிகள் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்றிருந்தது.

2. கல்விக்கொள்கைகள் உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தல், தலைமைத்துவம் மற்றும் நிறுவன முகாமத்துவம், பாடசாலை மேற்பார்வை மற்றும் தர உத்தரவாதம், ஆட்சி மற்றும் பொறுப்புக்கூறல், டிஜிட்டல் அறிவு மற்றும் தொழில்நுட்பம்சார் கற்றல், தரவு சார்ந்த தீர்மானங்கள், மூலோபாயத் திட்டமிடல் மற்றும் வள முகாமைத்துவம், பங்குதாரர்களுடனான ஒருங்கிணைப்பு, மற்றும் கல்வி நிர்வாகத்தில் சர்வதேச ரீதியில் பின்பற்றப்படும் சிறந்த நடைமுறைகள் ஆகிய தலைப்புகளை உள்ளடக்கிய தொழில்நுட்ப அமர்வுகள் மற்றும் அறிவுப் பகிர்வு நடவடிக்கைகளைக் இந்த செயல்திட்டம் கொண்டிருந்தது.

3. புத்தாக்கமான முகாமைத்துவ அணுகுமுறைகளின் பயன்பாட்டு நடைமுறைகள், வினைத்திறன்மிக்க கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பொறிமுறைகள், அத்துடன் வெற்றிகரமான கல்வி நடைமுறைகளை, குறிப்பாக இலங்கைச் சூழலுக்கு அமைவாக மாற்றியமைத்தல் ஆகியவற்றிற்கு இத்திட்டம் முக்கியத்துவமளிக்கின்றது.

4. 2025 ஏப்ரலில் இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த உத்தியோக பூர்வ விஜயத்தின்போது இலங்கை அதிகாரிகள் 700 பேருக்கு வருடாந்தம் இவ்வாறான தனிப்பயனாக்கப்பட பயிற்சிகள் வழங்கப்படுமென இந்தியாவால் அறிவிக்கப்பட்ட நிலையில் அதற்கு அமைவாக இத்திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இந்தியாவின் நல்லாட்சிக்கான தேசிய நிலையம் மற்றும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் (SLIDA) இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் 300 இலங்கையின் சிவில் சேவை அதிகாரிகள் வருடாந்தம் பயிற்றுவிக்கப்படுகின்றனர். அதன் அடிப்படையில் இந்தியாவின்

ஆளுமை விருத்தி திட்டம் மூலமாக தற்போது வருடாந்தம் 1000 இலங்கையர்கள் நன்மை அடைகின்றனர்.

****

கொழும்பு
16 ஒக்டோபர் 2026